குறிப்பாக, சைதாப்பேட்டை மண்டலத்தில் 35 அமுதம் நியாய விலை அங்காடிகள், 85 கூட்டுறவு அங்காடிகள் என 120 அங்காடிகள் சிறப்பாகச் செயல்பட்டு, 1,28,491 குடும்ப அட்டைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல், சைதாப்பேட்டை தொகுதியில் மட்டும் அம்மா அவர்களுடைய கடந்த ஆட்சிக் காலத்தில் 5 புதிய கடைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற எல்லா ஆட்சிக் காலங்களையும்விட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலங்களில் அங்காடிகளுக்குப் புதிதாகக் கட்டடங்கள் தொடர்ந்து கட்டப்பட்டன, தற்போதும் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

75—

மருத்துவமனைக்குக் கட்டடம்

***5082—திரு. C.V. சேகர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகின்றேன்.

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனை, பல்வேறு பிரிவுகளுடன் 202 படுக்கை

2018 மே 29]

வசதிகளுடன், நாளொன்றுக்கு 1,000 புறநோயாளிகள் என்ற வகையில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்குப் பிறகு, ஆய்வு செய்யப்பட்டு, தற்போது 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் முதன்மை சிகிச்சைப் பிரிவும், 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் அறுவை அரங்குடன்கூடிய CEmONC பிரிவும், 12 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இளம் சிசு பராமரிப்பு, அதாவது SNC Unit-ம் கட்டுவதற்கு நிதி வழங்கப்பட்டு, இந்த ஆண்டு பணிகள் துவங்கப்படவுள்ளன என்கின்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.

திரு. C.V. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எண்ணங்களை, கனவுகளை, இலட்சியங்களை சுமந்து நல்லாட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், அதற்கு உறுதுணையாக இருந்து அயராது உழைத்து வரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியிலே தொடர்ந்து சட்டப் போராட்டம் நடத்தி, காவேரி நதி நீர் உரிமையை மீட்டெடுத்த இந்த அரசுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி டெல்டா பகுதி மக்களின் சார்பில் என் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்து, என் கேள்வியைத் துவக்குகிறேன்.

பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் தினந்தோறும் 1,000 புறநோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கூறியதைப்போல, புறநோயாளிகள் பிரிவு, CEmONC குழந்தைகள் நலப் பிரிவு, அறுவை சிகிச்சைப் பிரிவு ஆகியவை கட்டுவதற்காக நிதி ஒதுக்கப்பட்டு, அதற்கான பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இருந்தபோதிலும், பெருகிவரும் உள்நோயாளிகளின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு, ஏற்கெனவே இயங்கிவரும் பழைய கட்டடங்களுக்குப் பதிலாக சுமார் 150 படுக்கை வசதிகள் கொண்ட புதிய கட்டட வசதியைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவிலேயே சுகாதாரத் துறையிலே முதன்மை மாநிலமாக தமிழகம் சிறப்புற விளங்கும் வகையில் பணியாற்றிவரும் மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர்

அவர்கள், அவர்களுடைய பக்கத்து மாவட்டமான என்னுடைய பட்டுக்கோட்டை தொகுதியில், 150 படுக்கை வசதி கொண்ட கட்டடத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள 202 படுக்கைகளைக் குறைவான நோயாளிகளே பயன்படுத்தி வருகின்றனர். இருந்தபோதிலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, வருங்காலங்களில் நோயாளிகளுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப அரசு கனிவோடு பரிசீலிக்கும். கூடுதலாக ஒரு தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன். பட்டுக்கோட்டை, கோவில்பட்டி, கடலூர் போன்ற மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் உள்ள மருத்துவமனைகளில், மருத்துவக் கல்லூரிகளில் உள்ள Dip.N.B. Course, பட்டயப் படிப்பு இந்தியாவிலேயே முதன்முதலாக இந்த ஆண்டு தொடங்கப்படவுள்ளது.

தாங்கள் சார்ந்திருக்கக்கூடிய பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையிலும் இந்த P.G. Course தொடங்கப்படுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறதென்ற கூடுதல் தகவலையும் பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், வருங்காலத்திலே உறுப்பினருடைய கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.

திரு. C.V.சேகர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பட்டுக்கோட்டை தொகுதியில் அமைந்துள்ள அதிராம்பட்டினம் அரசு மருத்துவமனை மிக நீண்ட காலமாக பழைய கட்டடத்திலே இயங்கி வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதையும் கருத்தில்கொண்டு புதிய கட்டட வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

2018 மே 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. சந்திரசேகர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

76—

வீட்டுமனைப் பட்டா

***11954—திரு. இரா. சந்திரசேகர்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை தொகுதி, பொன்னம்பட்டி பேரூராட்சி, 6-வது வார்டு பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர் குலம் காக்கும் தமிழர் குல சாமி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மணப்பாறை சட்டமன்றத் தொகுதி, மருங்காபுரி வட்டம், பொன்னம்பட்டி பேரூராட்சி, 6-வது வார்டு, திடீர் நகர் என்ற பகுதியானது துவரங்குறிச்சி கிராமம், புல எண் 374, துலக்கன்ராய் குளம் (எ) செட்டிக்குளம் பரப்பு 1.99.0 ஹெக்டேர் மற்றும் புல எண் 375 குட்டை பரப்பு 2.65.5 ஏர்ஸ் என்று கிராமக் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பகுதியானது நீர்நிலைப் புறம்போக்கு இனங்களில் வருவதாலும், மாண்பமை உயர் நீதிமன்றத்தில் நீர்நிலைப் புறம்போக்கிற்கு பட்டா வழங்க தடையாணை வழங்கப்பட்டுள்ளதாலும், அதன்படி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS